# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 11/பேரூ/2024**

**நாள்: 26.02.2025**

| | | |
|---|---|---|
| திரு. H. R. அக்பர் அலி<br>மதுக்கூர்<br>தஞ்சாவூர் மாவட்டம் | --- | முறையீட்டு மனுதாரர் |
| செயல் அலுவலர்,<br>மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி,<br>தஞ்சாவூர் மாவட்டம் | --- | எதிர்மனுதாரர் |

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர், 22/66 பள்ளிவாசல் தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. H. R. அக்பர் அலி என்பவரின் 27.06.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.06.2024 அன்று பெறப்பட்டு 11/பேரூ/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர், 22/66 பள்ளிவாசல் தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. H. R. அக்பர் அலி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெறும் வளம் மீட்பு பூங்கா அதிகாரிகளால் ஆய்வு செய்யப்படுவதில்லை. அதனை முறையாக பராமரித்தால் எங்களது ஊரில் சேரும் குப்பைகளுக்கு அது போதுமான இடமாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு கடந்த 2018–2019 ஆம் ஆண்டு சுமார் 64 இலட்சம் ரூபாய் செலவில் மதுக்கூர் வளம் மீட்பு பூங்கா புதுப்பிக்கப்பட்டு அதிலிருந்த குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டு வளம் மீட்பு பூங்கா தரிசு சம பகுதியாக காணப்பட்டது. மதுக்கூரில் முழுவதும் அள்ளப்படும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கும் பணிக்காக இயந்திரங்கள் வாங்கப்பட்டு அப்போதைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் திறக்கப்பட்டு நடைமுறைக்கு வந்தது.

அப்போதைய செயல் அலுவலர் திரு. இரா. கார்த்திகேயன் முன்னிலையில் இப்பணியை ஆரம்பித்தார்கள். ஆனால் அங்கு உரம் தயாரிக்கும் பணிகள் முறையாக நடைபெறாத காரணத்தால் தற்பொழுது குப்பைகள் மலை போல் குவிக்கப்பட்டு கிடக்கிறது.

திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெறும் வளம் மீட்பு பூங்கா உயர் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு அதனை முறையாக பராமரித்தால் எங்களது ஊரில் சேரும் குப்பைகளுக்கு அது போதுமான இடமாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு தினமும் சேகரிக்கப்படும் குப்பைகளை இயந்திரங்கள் மற்றும் பணியாட்களை கொண்டு உரம் தயாரிக்கும் பணிகள் செய்து வந்தால் குப்பைகள் பிரச்சினை சரியாகும். ஆனால் தினந்தோறும் சேகரிக்கப்படும் குப்பைகளை இந்த வளம் மீட்பு பூங்காவில் தரம் பிரிக்காமல் தீயிட்டு அழிக்கிறார்கள். இதனால் அருகில் குடியிருக்கும் பொது மக்களுக்கு சுவாசப் பிரச்சினை ஏற்படுகிறது. இந்த ஒரு வருடத்தில் மட்டும் மூன்று முறை தீயணைப்பு துறையினரால் அந்த தீ அணைக்கப்பட்டுள்ளது.

தனது நிர்வாக குறைபாட்டினால் அரசுக்கு பல இலட்ச ரூபாய்கள் நஷ்டம் ஏற்படுத்தும் செயல் அலுவலர் திரு. இரா. கார்த்திகேயன் மற்றும் அப்பணியை ஆய்வு செய்து கண்காணிக்க தவறிய துப்புரவு மேற்பார்வையாளர் திரு. முத்துக்குமார் ஆகிய இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்." என தெரிவித்து ஆதாரமாக புகைப்படங்களை சமர்ப்பித்துள்ளார்

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.07.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 15.12.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"மதுக்கூர் பேரூராட்சி தேர்வுநிலை பேரூராட்சியாகும். பேரூராட்சியின் மொத்த பரப்பளவு 7.00 ச. கி. மீ. ஆகும். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 16266 ஆக உள்ளது. இப்பேரூராட்சியில் மொத்தம் 15 வார்டுகளும் 85 தெருக்களும் உள்ளன. மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 6571, வணிக நிறுவனங்களின் எண்ணிக்கை 1061 ஆகும்.

இப்பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பேரூராட்சியில் உள்ள 15 வார்டுகளிலும் உள்ள 6571 வீடுகள் தோறும் குப்பைகள் சேகரம் செய்யப்படுகின்றன. வீடுகள் தோறும் குப்பைகள் தரம் பிரித்து வாங்கும் பணிக்கும் இப்பேரூராட்சியில் 50 தள்ளுவண்டிகள் 7 எண்ணிக்கையிலான பேட்டரி வாகனங்கள் மற்றும் 2 எண்ணிக்கையிலான இரண்டாம் நிலை சேகரிப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வீடுகள் தோறும் குப்பைகள் தரம் பிரித்து வாங்குவதற்கும், வளம் மீட்பு பூங்காவில் உரம் தயாரிக்கும் பணியிலும் 44 சுய உதவி குழு உறுப்பினர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதன்படி நாள்தோறும் 3MT ஆக குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு அதில் 1.350 MT ஆக மக்கும் குப்பையில் சராசரியாக 0.200 MT ஆக இயற்கை உரம் தயார் செய்யப்படுகிறது. மேற்படி தயார் செய்யப்படும் இயற்கை உரம் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும் குடியிருப்பு பகுதியில் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் மறுசுழற்சி செய்ய தகுந்த இரண்டு வகையான குப்பை தொட்டிகளில் பிரித்து வைத்திருந்து பேரூராட்சியிலிருந்து கழிவுகள் சேகரிக்க வரும்

நபரிடம் மட்டுமே கொடுக்க வேண்டும் என பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு தரம் பிரித்து வீடுகள் தோறும் சேகரம் செய்யப்படுகிறது. மக்கும் கழிவுகளை தனியாக அந்தந்த இரண்டாம் நிலை இடங்களுக்கு எடுத்துச் சென்று அங்கிருந்து இரண்டாம் நிலை சேகரிப்பு வாகனம் மூலம் வளம் மீட்பு பூங்காவிற்கு எடுத்து சென்று இயற்கை உரம் தயாரிக்கப்படுகிறது.

மதுக்கூர் பேரூராட்சிப் பகுதிகளில் பிளாஸ்டிக் விற்பனை மற்றும் பிளாஸ்டிக் பயன்பாட்டிற்கு முற்றிலும் தடை விதிக்கப்பட்டு பொதுமக்களிடையே விழிப்புணர்வு பேரணி, விளம்பர பேனர்கள், துண்டு பிரசுரம் ஒலி பெருக்கி மூலம் விளம்பரம் செய்யப்பட்டும் வணிக நிறுவனங்கள் மற்றும் ஹோட்டல் பேக்கரி மற்றும் திருமண மண்டப உரிமையாளர்களிடம் விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது. மேலும் பிளாஸ்டிக் பயன்படுத்தும் வணிக வியாபாரிகளிடமிருந்து தக்க ஆய்வு நடத்தி பிளாஸ்டிக் பைகள் பறிமுதல் செய்யப்பட்டு, அபராதம் விதிக்கப்பட்டது.

பேரூராட்சி செயல் அலுவலரால் தினசரி காலை மற்றும் மதியம் வேலையில் வளம் மீட்பு பூங்காவில் நடைபெறும் பணிகள் ஆய்வு செய்யப்பட்டு, பணியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், குப்பைகள் சேகரம் செய்யும் பதிவேடு, உரவிற்பனை செய்யும் பதிவேடு அவ்வப்போது ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

கழிவுகள் கொட்டப்பட்ட குப்பைகள் தனிநபராலோ, வழிப்போக்கராலோ தீயிடப்பட்டது, இத்தகவல் தெரிந்தவுடன் உடனடியாக தீயணைப்பு துறை தொடர்பு கொண்டு தீ அணைக்கப்பட்டது. பேரூராட்சி பணியாளர்கள் எவராலும் குப்பைகளை தீயிட்டு கொளுத்தப்படவில்லை என்பதையும் மனுதாரர் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள புகார் தவறானது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 17.02.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 10.02.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 17.02.2025 அன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை. இருப்பினும், பணிச்சுமை காரணமாக நேரில் ஆஜராகவில்லை என்பதால், 17.02.2025 நாளிட்ட ஈமெயில் மூலம் அனுப்பப்பட்ட தனது கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ள எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ளுமாறு கோரியுள்ளார்:

"மதுக்கூர் பேரூராட்சியில் நிரந்தர மற்றும் சுய உதவிக் குழுக்கள் மூலமாக பணி செய்யும் தூய்மைப் பணியாளர்கள் எண்ணிக்கை சுமார் 50 நபர்கள் பணி செய்தும் வளம் மீட்பு பூங்காவில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் அங்கு நடைபெறுவதில்லை. தினமும் அப்பணிகள் நடைபெறுகின்றனவா என அதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரிகள் ஆய்வு செய்வதில்லை. மேலும் எனக்கும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் (தஞ்சை மண்டலம்) அவர்கள் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட அறிக்கை கடிதத்தில் இணைக்கப்பட்டுள்ள புகைப்படங்களில் குப்பை கிடங்கில் மலை போல் குவிந்து கிடக்கும் குப்பைகள் காண்பிக்கப்படவில்லை. எங்கெங்கோ தெருக்களில் குப்பை வாங்குவது போல ஜோடிக்கப்பட்டு எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளது. எனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு போல உயர் அதிகாரிகள் ஆய்வு செய்து கடந்த 2018–2019 ஆம் ஆண்டு சுமார் 64 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக வாங்கப்பட்ட இயந்திரங்கள் அனைத்தும் செயல்பாட்டில் உள்ளனவா என துறை அதிகாரிகளால் இதுவரை ஆய்வு செய்யப்படவில்லை.

எனவே, திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெறும் வளம் மீட்பு பூங்கா உயர் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட வேண்டும். இன்று வரை மலை போல் குவிக்கப்படும் குப்பைகளை சிறந்த முறையில் தினமும் தரம் பிரித்து உரங்கள் தயாரித்து அரசுக்கு வருவாயை பெருக்க ஏற்பாடு செய்ய வேண்டும். குவிக்கப்பட்டிருக்கும் குப்பைகளை தீயிட்டு கொளுத்தாமல் இருக்க வேண்டும். குப்பைகளுக்கு தீ மூட்டுவதால் வளம் மீட்பு பூங்கா அருகாமையில் வசிக்கும் பொதுமக்களுக்கு ஏற்படும் சுவாசப் பிரச்சினை மற்றும் கொடிய நோய்களுக்கு பேரூராட்சி பொறுப்பேற்க வேண்டும். மேலும் அலட்சிய மனப்போக்குடன் பொறுப்பற்ற முறையில் நடந்து வரும் செயல் அலுவலர் மற்றும் அவருக்கு துணை போகும் அதிகாரிகள் அனைவர் மீதும் துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என மதிப்பிற்குரிய அய்யா அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ஆர். கார்த்திகேயன் என்பவர் 17.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

- மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பேரூராட்சியில் உள்ள 15 வார்டுகளில் அமைந்துள்ள 6571 வீடுகளில் தினந்தோறும் சுமார் 3 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு அதில் 1.350 மெட்ரிக் டன் மக்கும் குப்பையில் சராசரியாக 0.200 மெட்ரிக் டன் இயற்கை உரம் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. எனவே மனுதாரர் தனது புகார் மனுவில், வளம் மீட்பு பூங்காவில் பேரூராட்சியால், இயற்கை உரம் தயாரிக்கப்படுவதில்லை என்பது ஆதாரமற்றது ஆகும்.
- இப்பணியில் பேரூராட்சியில் உள்ள 44 சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.
- மேலும் எதிர்பாரா சமயங்களில், கழிவுகள் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை தனி நபராலோ, வழி போக்கராலோ தீயிட்டு கொளுத்தப்படுகிறது. அச்சமயங்களில் தீயணைப்பு துறை மூலம் உடனடியாக தீ அணைக்கப்படுகிறது.
- இந்நேர்வுகளை தவிர்க்க, வளம் மீட்பு பூங்காவில் 2 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் பணியாளர் ஒருவரை தனியாக நியமித்து கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 15வது நிதி குழு மானியத் திட்டத்தின்கீழ், ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் குப்பைகளை சலிக்கும் இயந்திரம் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- பெருகிவரும் மக்கள் தொகையின் அடிப்படையில் தற்போதுள்ள வளம் மீட்பு பூங்காவிற்கு போதுமான இட பற்றாக்குறை காரணமாக பூங்காவிற்கு புதிய நிலம் வாங்குவதற்கு பேரூராட்சி மன்றத்தில் 14.02.2025 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரர் தெரிவித்துள்ளது போல் குப்பைகள் பேரூராட்சி பணியாளர்களால் தீயிட்டு கொளுத்தப்படுவதில்லை என்பதையும், வளம் மீட்பு பூங்காவில் தயாரிக்கப்படும் இயற்கை உரங்கள் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுவதால், பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏதும் ஏற்படவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது எழுத்துப்பூர்வமான வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

8. மனுதாரர் தனது 27.06.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில், தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் பேரூராட்சியில், கடந்த 2018–2019 ஆம் ஆண்டு சுமார் 64 இலட்சம் ரூபாய் செலவில் மதுக்கூர் வளம் மீட்பு பூங்கா புதுப்பிக்கப்பட்டு அதிலிருந்த குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டு வளம் மீட்பு பூங்கா தரிசு சம பகுதியாக காணப்பட்டது எனவும், மதுக்கூரில் முழுதும் அள்ளப்படும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கும் பணிக்காக இயந்திரங்கள் வாங்கப்பட்டு நடைமுறையில் இருந்ததாகவும், ஆனால் அங்கு உரம் தயாரிக்கும் பணிகள் முறையாக நடைபெறாத காரணத்தால் தற்பொழுது குப்பைகள் மலை போல் குவிக்கப்பட்டு கிடக்கிறது எனவும், ஆனால் தினந்தோறும் சேகரிக்கப்படும் குப்பைகளை இந்த வளம் மீட்பு பூங்காவில் தரம் பிரிக்காமல் தீயிட்டு அழிப்பதால், அருகில் குடியிருக்கும் பொது மக்களுக்கு சுவாசப் பிரச்சினை ஏற்படுகிறது எனவும், திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெறும் வளம் மீட்பு பூங்காவினை உயர் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு அதனை முறையாக பராமரித்தால் மனுதாரரது ஊரில் சேரும் குப்பைகளுக்கு அது போதுமான இடமாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு தினமும் சேகரிக்கப்படும் குப்பைகளை இயந்திரங்கள் மற்றும் பணியாட்களை கொண்டு உரம் தயாரிக்கும் பணிகள் செய்து வந்தால் குப்பைகள் பிரச்சினை சரியாகும் எனவும், நிர்வாக குறைபாட்டினால் அரசுக்கு பல இலட்ச ரூபாய்கள் நஷ்டம் ஏற்படுத்தும் செயல் அலுவலர் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர் ஆகிய இருவர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்து உள்ளார்.

மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பேரூராட்சியில் உள்ள 15 வார்டுகளில் அமைந்துள்ள 6571 வீடுகளில் தினந்தோறும் சுமார் 3 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு அதில் 1.350 மெட்ரிக் டன் மக்கும் குப்பையில் சராசரியாக 0.200 மெட்ரிக் டன் இயற்கை உரம் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது எனவும், இப்பணியில் பேரூராட்சியில் உள்ள 44 சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது. இந்நிலையில் எதிர்பாரா சமயங்களில், கழிவுகள் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை தனி நபராலோ, வழிப்போக்கராலோ தீயீட்டு கொளுத்தப்பட்டது. அச்சமயங்களில் தீயணைப்பு துறை மூலம் உடனடியாக தீ அணைக்கப்பட்டது. இதுபோன்ற அசாம்பாவிதங்களை தவிர்க்க, வளம் மீட்பு பூங்காவில் 2 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, பணியாளர் ஒருவரை தனியாக நியமித்து கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனையும், செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவர் சமர்ப்பித்த புகைப்படங்களின் மூலம் தெரிய வருகிறது. 15வது நிதி குழு மானியத் திட்டத்தின் கீழ், ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் குப்பைகளை சலிக்கும் இயந்திரம் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது எனவும், பெருகிவரும் மக்கள் தொகையின் அடிப்படையில் தற்போதுள்ள வளம் மீட்பு பூங்காவிற்கு போதுமான இட பற்றாக்குறை காரணமாக பூங்காவிற்கு புதிய நிலம் வாங்குவதற்கு பேரூராட்சி மன்றத்தில் 14.2.2025 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும் மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இருப்பினும், மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், சேகரம் செய்யப்படும் அனைத்து குப்பைகளும் தேக்கமின்றியும், பொதுமக்களுக்கு எவ்வித சுகாதார கேடின்றியும் முறையாக தரம் பிரித்து உரம் தயாரிக்கப்படுவதை, உறுதி செய்து தொடர்

கண்காணிப்பில் ஈடுபடுமாறு மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இந்நிலையில், மதுக்கூர் தேர்வுநிலை செயல் அலுவலரின் அறிக்கையை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறை மன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு பிப்ரவரி 26-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. H. R. அக்பர் அலி,
22/66 பள்ளிவாசல் தெரு,
மதுக்கூர்–614 903
தஞ்சாவூர் மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
~~இகோ~~/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

28/2/25

சட்ட ஆலோசகர்/செயலாளர் (மு.கூ.பொ.)

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032